FACILITATOR'S GUIDE

எஜமானுக்கு உபயோகமான பாத்திரம்

Workshop-ஐ நடத்துபவர்களுக்கான வழிகாட்டி

"...எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும்
ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய
பாத்திரமாயிருப்பான்."

— 2 தீமோத்தேயு 2:21



S	H	A	P	E
ஆவிக்குரிய வரங்கள்	விருப்பம்	திறன்கள்	ஆளுமை	அனுபவங்கள்

TRANSLATED & ADAPTED BY

Praison Timothy

உள்ளடக்கம்

சபை _____ Facilitator(s) _____

தொடக்கத் தேதி _____ இடம் _____

தொடங்கும் முன்
Facilitator-க்கு ஒரு வார்த்தை · Workshop வடிவங்கள் · தயாரிப்பு — பக். 3–5

Session-களை நடத்துதல்
ஒவ்வொரு Session-உம் எப்படி நடக்கும் · நல்ல Group Discussion — பக். 6–7

Session 1
தொடக்கமும் ஆவிக்குரிய வரங்களும்
திட்டம் · Teaching & Discussion · Self Test உதவி — பக். 8–10

Session 2
H — விருப்பம்
திட்டம் · Teaching & Discussion — பக். 11–12

Session 3
A — திறன்கள்
திட்டம் · Teaching & Discussion — பக். 13–14

Session 4
P — ஆளுமை
திட்டம் · Teaching & Discussion — பக். 15–16

Session 5
E — அனுபவங்கள் + என் S.H.A.P.E.
திட்டம் · Teaching & Discussion — பக். 17–18

நிறைவு — அர்ப்பணிப்பு ஆராதனை — பக். 19

அடிக்கடி வரும் கேள்விகள் — பக். 20

Workshop-க்குப் பின்
Follow-up · சபை ஊழியங்களும் வரங்களும் · Participant Tracker — பக். 21–23

தொடங்கும் முன்

Facilitator-க்கு ஒரு வார்த்தை

நீங்கள் ஆசிரியர் மட்டுமல்ல; வழிகாட்டி

இந்த Workshop-இன் நோக்கம் தகவல் கொடுப்பது மட்டுமல்ல; ஒவ்வொருவரும் தேவன் தன்னை எப்படி வடிவமைத்திருக்கிறார் என்று கண்டறிந்து, சபையில் தன் இடத்தில் நின்று பரிமாறத் தொடங்குவதே. பதில்களை நீங்கள் கொடுக்க வேண்டியதில்லை — ஒவ்வொருவரும் தாங்களே கண்டறிய இடம் கொடுங்கள்.

I உங்கள் மூன்று பங்குகள்

ஜெபிப்பவர்

ஒவ்வொரு பங்கேற்பாளருக்காகவும் பெயர் சொல்லி ஜெபியுங்கள். கண்டறிதல் பரிசுத்த ஆவியானவரின் வேலை.

வழிகாட்டி

பதில்களைச் சொல்ல வேண்டாம்; நல்ல கேள்விகளைக் கேட்டு, செவிகொடுத்து, உரையாடலை நோக்கத்தை நோக்கி நடத்துங்கள்.

மேய்ப்பர்

Workshop முடிந்த பின்னும் தொடர்பில் இருந்து, ஒவ்வொருவரையும் பொருத்தமான ஊழியத்தோடு இணையுங்கள்.

II இந்த வழிகாட்டியில்

- ஐந்து Session-களுக்கும் படிப்படியான திட்டம்
- Teaching-க்கான முக்கியக் கருத்துகள்
- Self Test, Score உதவிக் குறிப்புகள்
- Workshop-க்குப் பிந்தைய Follow-up
- ஒவ்வொரு Session-க்கும் Icebreaker
- Discussion கேள்விகளுக்கான வழிகாட்டுதல்
- அர்ப்பணிப்பு ஆராதனை

☆ **முதலில் நீங்களே.** Workshop நடத்துவதற்கு முன், Workbook-ஐ நீங்களே முழுமையாகச் செய்து முடியுங்கள். உங்கள் சொந்த அனுபவமே சிறந்த Teaching. Workbook பக்க எண்கள் இந்த வழிகாட்டியில் “பக்.” என்று குறிக்கப்பட்டுள்ளன.

> அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.
>
> **— 1 பேதுரு 4:10**

திட்டமிடுதல்

Workshop வடிவங்கள்

உங்கள் சபைக்கு ஏற்ற ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்



A

பரிந்துரை

வாராந்திரம்

5 வாரங்கள் · வாரத்துக்கு ஒரு Session

நன்மை: வாரத்தின் இடைவெளியில் யோசிக்கவும், குடும்பத்தாரிடம் கேட்கவும், ஜெபிக்கவும் நேரம் கிடைக்கும்.

கவனம்: Self Test-ஐ முதல் வாரம் வீட்டில் முடிக்கலாம்.

B

இரண்டு நாள் Retreat

நாள் 1: Session 1, 2, 3 · நாள் 2: Session 4, 5 + அர்ப்பணிப்பு

நன்மை: ஆழ்ந்த கவனம், நல்ல ஐக்கியம்.

கவனம்: Self Test-ஐ முந்தைய வாரமே வீட்டில் செய்து வரச் சொல்லுங்கள்.

C

ஒரு நாள் Intensive

காலை: Session 1, 2 · மதியம்: Session 3, 4, 5

நன்மை: பயணம் செய்து வருபவர்களுக்கு எளிது.

கவனம்: Self Test முன்கூட்டியே வீட்டில்; Session 5-இன் வேதனையான அனுபவங்கள் பகுதியை அவசரப்படுத்த வேண்டாம்.

I என் Workshop திட்டம்

Session	தலைப்பு	பக்கங்கள்	தேதி	Facilitator
Session 1	தொடக்கமும் ஆவிக்குரிய வரங்களும்	5–20		
Session 2	H — விருப்பம்	21–23		
Session 3	A — திறன்கள்	24–26		
Session 4	P — ஆளுமை	27–28		
Session 5	E — அனுபவங்கள் + என் S.H.A.P.E.	29–35		

II குழுவின் அளவு

6–8 பேர்
ஒரு குழுவுக்கு ஏற்ற அளவு; எல்லோரும் பேச நேரம் கிடைக்கும்.

10-க்கு மேல்
Table Leader-களை நியமித்து, சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.

குடும்பங்கள்
கணவன் மனைவி ஒரே குழுவில் இருந்தால் சிலர் தயங்கலாம்; விருப்பம் கேளுங்கள்.

♡ **உங்கள் வேகத்தில்.** Workbook-இலும் இந்த வழிகாட்டியிலும் நேரக் கட்டுப்பாடு இல்லை. உங்கள் குழுவுக்கு ஏற்ப ஒவ்வொரு பகுதிக்கும் தேவையான நேரம் கொடுங்கள்.

திட்டமிடுதல்

தயாரிப்பு Checklist

நல்ல Workshop நல்ல தயாரிப்பில் தொடங்குகிறது

4 வாரங்களுக்கு முன்

- [ ] போதகரோடு தேதிகள், இடம் உறுதிசெய்தல்
- [ ] அறிவிப்பும் பதிவும் (Registration)
- [ ] Workbook அச்சிடுதல் — ஒருவருக்கு ஒன்று + சில கூடுதல்
- [ ] Table Leader-களைத் தேர்ந்தெடுத்தல்

1 வாரத்திற்கு முன்

- [ ] Workbook-ஐ நீங்களே மீண்டும் பார்வையிடுதல்
- [ ] பங்கேற்பாளர் பட்டியலை வைத்துப் பெயர் சொல்லி ஜெபித்தல்
- [ ] Table Leader கூட்டம் — இந்த வழிகாட்டியின் பக். 6–7
- [ ] Retreat / ஒரு நாள் வடிவம் என்றால்: Workbook-ஐ முன்கூட்டியே கொடுத்தல்

Session நாளில்

- [ ] 30 நிமிடம் முன்பே வருதல்
- [ ] இருக்கைகளைக் குழுக்களாக அமைத்தல்
- [ ] பொருட்களைச் சரிபார்த்தல்
- [ ] ஜெபக் குழுவோடு ஜெபித்தல்

I தேவையான பொருட்கள்

- [ ] Workbook (ஒருவருக்கு ஒன்று)
- [ ] பேனா / பென்சில்
- [ ] வேதாகமம்
- [ ] பெயர் அட்டைகள் (Name tags)
- [ ] பெரிய தாள் (Chart paper)
- [ ] மார்க்கர்கள்
- [ ] கயிறு அல்லது Tape (Session 4)
- [ ] Calculator (விருப்பம்)
- [ ] Tissue paper (Session 5)
- [ ] Projector / Whiteboard (விருப்பம்)
- [ ] டீ / சிற்றுண்டி
- [ ] சான்றிதழ்கள் (விருப்பம்)

II காட்சிக்குச் சமையலறைப் பாத்திரங்கள்



கரண்டி, டம்ளர், பெரிய பாத்திரம், மிக்ஸி ஜார், சல்லடை, தோசைக்கல் — உண்மையான பாத்திரங்களை மேஜையில் வையுங்கள். கண்ணால் காணும் பாடம் நீண்ட நாள் நினைவில் நிற்கும்; அர்ப்பணிப்பு ஆராதனையிலும் (பக். 19) பயன்படும்.

III Table Leader-கள்

ஒவ்வொரு குழுவுக்கும் ஒருவர். அவர்கள் Workbook-ஐ முன்பே செய்திருக்க வேண்டும். அவர்களின் வேலை: குழு ஒப்பந்தத்தைக் காத்தல், எல்லோரும் பேச இடம் கொடுத்தல், நேரத்தைக் கவனித்தல், தேவைப்படுபவர்களைப் பற்றி Facilitator-இடம் சொல்லுதல்.

> ⚠ **ஜெபக் குழு.** இரண்டு மூன்று பேரை Workshop நாட்களில் தனியாக ஜெபிக்கக் கேளுங்கள். கண்டறிதல் ஆவியானவரின் வேலை.

ஒவ்வொரு Session-உம் எப்படி நடக்கும்

ஆறு படிகள் · உங்கள் வேகத்தில்



ஜெபம் & வரவேற்பு — Icebreaker — Teaching — Personal Work — Group Sharing — நிறைவு ஜெபம்

1. ஜெபம் & வரவேற்பு

பெயர் சொல்லி வரவேற்று, ஆவியானவரின் வழிநடத்துதலுக்காக ஜெபியுங்கள். Session 2 முதல், கடந்த வாரம் கண்டறிந்ததை ஓரிருவர் பகிரட்டும்.

2. Icebreaker

இலகுவான, சிரிப்பு தரும் தொடக்கம். அன்றைய தலைப்புக்குள் நுழையும் கதவு.

3. Teaching

முக்கியக் கருத்துகளை Workbook பக்கங்களைத் திறந்து வைத்துக்கொண்டு சுருக்கமாக விளக்குங்கள். இது பிரசங்கம் அல்ல.

4. Personal Work

அமைதியான நேரம்; மெல்லிய இசை போடலாம். சுற்றி வந்து உதவுங்கள், ஆனால் பதில்களைப் பார்க்க வேண்டாம்.

5. Group Sharing

Workbook-இன் “Reflect & Discuss” கேள்விகள். விரும்புவதை மட்டும் பகிரட்டும்.

6. நிறைவு ஜெபம்

ஒருவருக்காக ஒருவர் ஜெபம்; அடுத்த Session-க்கு முன் செய்ய வேண்டியவை.

ஒவ்வொரு Session-க்கும் தனித் திட்டம். பக். 8 முதல் ஒவ்வொரு Session-க்கும் இந்த ஆறு படிகளின் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. நேரக் கட்டுப்பாடு இல்லை; உங்கள் குழுவுக்குத் தேவையான நேரம் கொடுங்கள்.

நல்ல Group Discussion

பேசுவதைவிட, கேட்பதே Facilitator-இன் பெரிய வேலை



I குழு ஒப்பந்தம் (முதல் Session-இல் சேர்ந்து வாசியுங்கள்)

1. **இங்கே பகிர்வது இங்கேயே இருக்கும்.** வெளியே யாரிடமும் சொல்ல மாட்டோம்.
2. **கட்டாயம் இல்லை.** விரும்பாதவர் “Pass” என்று சொல்லலாம்.
3. **திருத்த வேண்டாம், கேளுங்கள்.** ஆலோசனை கேட்கப்பட்டால் மட்டும்.
4. **ஒப்பிட வேண்டாம்.** ஒவ்வொரு பாத்திரமும் தனித்துவமானது.
5. **Phone silent.** முழுக் கவனமும் இங்கே.

II Facilitator-க்கான ஏழு குறிப்புகள்

திறந்த கேள்விகள்

“ஏன்?”, “அதைப் பற்றி இன்னும் சொல்லுங்கள்”, “அது உங்களுக்கு எப்படி இருந்தது?”

அமைதிக்குப் பயப்பட வேண்டாம்

கேள்வி கேட்ட பின் பத்து வினாடி காத்திருங்கள்; யோசிக்க நேரம் கொடுங்கள்.

அதிகம் பேசுபவர்

“நன்றி! இதுவரை பேசாத ஒருவரிடம் கேட்போம்.”

அமைதியானவர்

முதலில் இருவர் இருவராகப் பகிரச் செய்யுங்கள்; பின்பு குழுவில்.

கண்ணீர் வந்தால்

அவசரப்படுத்த வேண்டாம். Tissue, அமைதி, பின்பு “உங்களுக்காக ஜெபிக்கலாமா?”

தலைப்பு விலகினால்

“நல்ல கேள்வி — இடைவேளையில் பேசலாம்.”

நீங்களே முதலில்

உங்கள் நேர்மையான பகிர்வு குழுவுக்கு அனுமதி கொடுக்கும்.

III சொல்லலாம் / தவிர்க்கலாம்

✓ சொல்லலாம்	✕ தவிர்க்கலாம்
“உங்களில் இந்த வரத்தை நான் பார்க்கிறேன்.”	“உங்களுக்கு அந்த வரம் இல்லை.”
“அது உங்களுக்கு எப்படி இருந்தது?”	“அப்படி நினைக்கக்கூடாது.”
“சேவை செய்து பாருங்கள்; தெளிவாகும்.”	“இந்த Score-ஐ வைத்து இப்போதே முடிவு செய்யுங்கள்.”

SESSION 1

Workbook பக்கங்கள் 5–20

தொடக்கமும் ஆவிக்குரிய வரங்களும்

இந்த Session-இன் நோக்கம்

நான் இன்று எங்கே இருக்கிறேன் என்று நேர்மையாகப் பார்த்து, பரிசுத்த ஆவியானவர் எனக்கு அருளிய வரங்களைக் கண்டறியத் தொடங்குதல்.

I Session-இன் படிகள்

ஜெபம் & வரவேற்பு	பெயர் அட்டைகள் கொடுத்து வரவேற்றல். குழு ஒப்பந்தத்தை (இந்த வழிகாட்டி, பக். 7) சேர்ந்து வாசித்து, ஜெபத்தோடு தொடங்குதல்.
Icebreaker	கீழே உள்ள Icebreaker.
Teaching: ஐந்து உண்மைகள்	சமையலறைப் பாடம், S.H.A.P.E. (Workbook பக். 3), ஐந்து உண்மைகள் (பக். 8). அடுத்த பக்கக் குறிப்புகள்.
Personal Work	“நான் யார்?” (பக். 6–7), பிறகு Self Test (பக். 10–18) தொடங்குதல்.
Group Sharing	“நான் எந்தச் சமையலறைப் பாத்திரம்?” (பக். 9), Reflect & Discuss (பக். 5).
நிறைவு ஜெபம்	Self Test-ஐ வீட்டில் முடிக்க நினைவூட்டி, இருவர் இருவராக ஜெபம்.

II Icebreaker

Icebreaker

உங்கள் வீட்டுச் சமையலறையில் உங்களுக்குப் பிடித்த பாத்திரம் எது? ஏன்? ஒவ்வொருவரும் சுருக்கமாகப் பகிருங்கள்.

- Facilitator முதலில் தன் பாத்திரத்தைச் சொல்லித் தொடங்கட்டும்; ஒவ்வொருவரும் சுருக்கமாக.
- இணைப்பு: “நம் சமையலறையில் ஒவ்வொரு பாத்திரத்துக்கும் ஒரு வேலை உண்டு — நமக்கும் அப்படியே.”

III தேவையானவை

- [ ] Workbook (ஒருவருக்கு ஒன்று)
- [ ] பேனா / பென்சில்
- [ ] பெயர் அட்டைகள்
- [ ] சில சமையலறைப் பாத்திரங்கள் (காட்சிக்கு)
- [ ] Calculator (விருப்பம்)
- [ ] வேதாகமம்

Teaching & Discussion

I Teaching — முக்கியக் கருத்துகள்

1. **சமையலறைப் பாடம்.** ஒவ்வொரு பாத்திரமும் வேறு வடிவம், ஒரே நோக்கம் — பரிமாறுவது. 2 தீமோ 2:20–21-ஐ வாசியுங்கள் (பக். 3).

2. **S.H.A.P.E. — ஐந்து கேள்விகள்.** வரம், விருப்பம், திறன், ஆளுமை, அனுபவம் — ஐந்தும் சேர்ந்தே ஒருவரின் வடிவம். ஒன்றை மட்டும் வைத்து முடிவு செய்ய வேண்டாம்.

3. **ஐந்து உண்மைகள்.** இரட்சிப்புக்குப் பின்பே; ஆவியானவரே பகிர்ந்தளிக்கிறார்; ஒவ்வொருவருக்கும்; பரிமாறுவதற்காக; திறக்கப்பட வேண்டும் (பக். 8).

4. **திறனும் வரமும் வேறு.** திறன்கள் முதல் பிறப்பில், வரங்கள் மறுபிறப்பில். இரண்டும் தேவனுடையவை; Session 3-இல் இரண்டையும் இணைத்துப் பார்ப்போம்.

5. **தேர்வு ஒரு கண்ணாடி.** Score ஒரு தொடக்கம் மட்டுமே, தீர்ப்பு அல்ல. சேவை செய்யும்போதும், சபை உறுதிப்படுத்தும்போதும் வரம் தெளிவாகும்.

II Discussion — Workbook கேள்விகள்

1. **சபையில் “பெரிய பாத்திரம்” மட்டுமே முக்கியம் என்று நினைத்த அனுபவம் உண்டா? ஏன் அப்படி நினைக்கிறோம்?**
   → நோக்கம்: மேடை ஊழியம் மட்டுமே முக்கியம் என்ற எண்ணத்தை வெளிக்கொணருதல். 1 கொரி 12:22-ஐ நினைவூட்டுங்கள்.

2. **தேவன் உங்களுக்கு ஒரு வரம் கொடுத்திருக்கிறார் என்று எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா? எப்போது?**
   → பதில் இல்லையென்றாலும் பரவாயில்லை — இந்தப் பயிற்சியே அதற்காக.

3. **உங்களிடம் ஒரு வரம் இருப்பதை முதலில் கவனித்தது நீங்களா, மற்றவர்களா?**
   → மற்றவர்களின் உறுதிப்படுத்தல் ஏன் முக்கியம் என்பதற்கு இது அடித்தளம் (பக். 34).

> **கவனிக்க:** Self Test-ஐ அவசரமில்லாமல் செய்யட்டும்; தேவைப்பட்டால் மீதியை வீட்டில் முடிக்கலாம்.

அடுத்த Session-க்கு முன்

- [ ] 133 வாக்கிய Self Test-ஐ முடியுங்கள்
- [ ] Score-ஐக் கணக்கிட்டு, Gifts Chart-ஐ நிரப்புங்கள் (பக்கம் 19)
- [ ] முதல் மூன்று வரங்களை எழுதுங்கள் (பக்கம் 20)

நிறைவு ஜெபம்

> ஆண்டவரே, நீர் எனக்கு அருளிய வரங்களைக் காணும்படி என் கண்களைத் திறந்தருளும். அவற்றை என் பெருமைக்காக அல்ல, உமது சபையின் நன்மைக்காகப் பயன்படுத்த உதவிசெய்யும். ஆமென்.

Self Test & Score — உதவிக் குறிப்புகள்

I Self Test-ஐ அறிமுகப்படுத்துதல்

133 வாக்கியங்கள், 19 வரங்கள். ஒவ்வொரு வாக்கியத்துக்கும் 0 முதல் 3 வரை. “இருக்க வேண்டியதை” அல்ல, உண்மையில் செய்வதையும் உணர்வதையும் வைத்துப் பதில் சொல்லச் சொல்லுங்கள். ஒரு வாக்கியத்தில் அதிக நேரம் நிற்க வேண்டாம்.

3	2	1	0
எப்போதும் உண்மை	பெரும்பாலும் உண்மை	சில சமயம் மட்டும்	ஒருபோதும் இல்லை

II Score கணக்கிடுதல் — நான்கு படிகள்

1. எண் எழுதுதல்

133 வாக்கியங்களுக்கும் 0–3 (பக். 10–18). முதல் எண்ணமே பெரும்பாலும் சரி.

2. வரிசைப்படுத்துதல்

ஒவ்வொரு வரத்துக்கும் 7 வாக்கியங்கள்; அவற்றின் எண்கள் Score அட்டவணையில் (பக். 19).

3. கூட்டுதல்

ஏழு மதிப்பெண்களைக் கூட்டி “மொத்தம்” (அதிகபட்சம் 21).

4. வரைபடம்

கட்டங்களை வண்ணமிட்டு Gifts Chart; முதல் மூன்று வரங்கள் பக். 20-இல்.

> **சரிபார்க்க ஒரு வழி:** ஒவ்வொரு வரத்தின் வாக்கியங்களும் 19 இடைவெளியில் வருகின்றன (A: 1, 20, 39 …). தவறாக எழுதப்பட்ட வரிசையை எளிதில் கண்டுபிடிக்கலாம்.

III அடிக்கடி வரும் சூழல்கள்

சம மதிப்பெண்கள் (Tie)

இரண்டையும் எழுதச் சொல்லுங்கள். பிறகு கேளுங்கள்: “எதைச் செய்யும்போது அதிக மகிழ்ச்சி?”

எல்லாமே குறைவு

பெரும்பாலும் புதிய விசுவாசி அல்லது ஊழிய அனுபவம் குறைவு. “சேவை செய்யத் தொடங்குவதே சிறந்த வழி” (பக். 4).

எல்லாமே அதிகம்

“இருக்க வேண்டியதை” எழுதியிருக்கலாம். நேர்மையாக மீண்டும் ஒருமுறை பார்க்கச் சொல்லுங்கள்.

எண் அல்ல, வரிசை

எண்ணின் அளவை விட, முதல் மூன்று மொத்தங்களே கவனிக்க வேண்டியவை.

அளவிடாத வரங்கள்

அந்நிய பாஷை, வியாக்கியானம், குணமாக்குதல், அற்புதங்கள் — ஜெபத்தாலும் சபையின் உறுதிப்படுத்தலாலும் (பக். 20). விவாதம் எழுந்தால் சபையின் போதனையைச் சுருக்கமாகச் சொல்லி, விரிவாகப் பேச போதகரிடம் நேரம் கொடுங்கள்.

கண்ணிகள்

ஒப்பிடுதல், சுயத்தை முன் நிறுத்துதல் போன்றவை (பக். 20). குற்ற உணர்வு அல்ல, விழிப்புணர்வே நோக்கம்.

SESSION 2

Workbook பக்கங்கள் 21–23

H — விருப்பம்

இந்த Session-இன் நோக்கம்

தேவன் என் உள்ளத்தில் வைத்த வாஞ்சையையும் பாரத்தையும் — யாருக்காக, எதற்காக — அடையாளம் காணுதல்.

I Session-இன் படிகள்

ஜெபம் & வரப் பகிர்வு	இருவர் இருவராக: “என் முதல் மூன்று வரங்கள்” (பக். 20) பகிர்ந்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்.
Icebreaker	கீழே உள்ள Icebreaker.
Teaching: விருப்பத்தின் அடையாளங்கள்	பாத்திரம் எதால் நிரம்பியிருக்கிறது? வரம் vs விருப்பம் (பக். 22).
Personal Work	H பகுதி I–V (பக். 22–23).
Group Sharing	Reflect & Discuss (பக். 21); பெரிய கனவுகளைப் பகிர்தல்.
நிறைவு ஜெபம்	ஒவ்வொருவரும் தன் கனவுக்காக ஒரு வாக்கிய ஜெபம்.

II Icebreaker

Icebreaker

நேரம் போவதே தெரியாமல் நீங்கள் செய்யும் ஒரு காரியத்தை ஒரு சொல்லில் சொல்லுங்கள். குழு அதை ஒரு பெரிய தாளில் எழுதட்டும்.

- எல்லாச் சொற்களும் எழுதப்பட்ட பின் கேளுங்கள்: “இவற்றில் எதை தேவனுக்காகப் பயன்படுத்தலாம்?”
- இணைப்பு: நேரம் மறக்கச் செய்யும் காரியங்களே விருப்பத்தின் முதல் அடையாளம்.

III தேவையானவை

- [ ] பெரிய தாள் (Chart paper)
- [ ] மார்க்கர்கள்
- [ ] Workbook
- [ ] வேதாகமம்

Teaching & Discussion

I Teaching — முக்கியக் கருத்துகள்

1. **நிரம்பியிருப்பதையே கொண்டு செல்லும்.** பாத்திரம் எதால் நிரம்பியிருக்கிறதோ அதையே மற்றவர்களுக்குக் கொண்டு செல்லும் (பக். 22). உள்ளத்தை நிரப்பியிருக்கும் வாஞ்சையே ஊழியத்தின் திசை.

2. **வரம் "என்ன"; விருப்பம் "எங்கே, யாருக்காக".** ஒரே போதிக்கும் வரம் — ஒருவர் குழந்தைகளுக்கு, ஒருவர் கல்லூரி மாணவர்களுக்கு. வித்தியாசம் விருப்பத்தில்.

3. **மூன்று அடையாளங்கள்.** நேரம் போவதே தெரியாத காரியங்கள்; அழவைக்கும் காட்சிகள்; பேசும்போது உற்சாகம் தரும் தலைப்புகள் (சங் 37:4).

4. **தேவைகளும் பிரச்சனைகளும்.** நம் வாழ்க்கையில் தேவன் சந்தித்த தேவைகளிலிருந்து தொடங்குவது நல்லது (2 கொரி 1:4; பக். 23).

5. **கனவு: "என்ன?" மட்டும்.** "எப்படி?" என்பது தேவனுடைய பகுதி. கனவைச் சிறியதாக்க வேண்டாம்.

II Discussion — Workbook கேள்விகள்

1. **எந்தக் காட்சி அல்லது செய்தி உங்களை அழவைக்கிறது? ஏன்?**
   → நெகிழ்ச்சி வரலாம்; அவசரப்படுத்த வேண்டாம். அழவைப்பது பெரும்பாலும் ஒரு பாரத்தின் அடையாளம்.

2. **எந்த மக்களைப் பார்க்கும்போது, அவர்களுக்கு உதவ உங்கள் உள்ளம் ஏங்குகிறது?**
   → பக். 22-இல் குறித்த கூட்டங்களோடு இணைத்துப் பேசச் செய்யுங்கள்.

3. **பணமோ தடையோ இல்லையென்றால், தேவனுக்காக நீங்கள் செய்ய விரும்பும் ஒரு காரியம் என்ன?**
   → குழு கனவுகளை உற்சாகப்படுத்தட்டும்; "இது நடக்குமா?" என்று விமர்சிக்க வேண்டாம்.

> **கவனிக்க:** சமூகப் பிரச்சனைகள் பகுதியில் சிலர் தங்கள் சொந்த வேதனையைத் தொடலாம்; பகிர்வைக் கட்டாயப்படுத்த வேண்டாம்.

அடுத்த Session-க்கு முன்

- [ ] குடும்பத்தில் ஒருவரிடம் கேளுங்கள்: "நான் எதைப் பற்றிப் பேசும்போது உற்சாகமாகிறேன்?"
- [ ] Section 3-ல் விடுபட்டதை முடியுங்கள்
- [ ] உங்கள் கனவுக்காக இந்த வாரம் தினமும் ஜெபியுங்கள்

நிறைவு ஜெபம்

> ஆண்டவரே, நீர் என் உள்ளத்தில் வைத்த பாரத்தைத் தெளிவாக்கும். நீர் நேசிக்கிறவர்களை நானும் நேசிக்கும்படி என் இருதயத்தை உம்மைப்போல் மாற்றும். ஆமென்.

SESSION 3

Workbook பக்கங்கள் 24–26

A — திறன்கள்

இந்த Session-இன் நோக்கம்

தேவன் தந்த இயற்கைத் திறன்களைக் கண்டறிந்து, அவற்றை அவருடைய பணிக்கு அர்ப்பணித்தல்.

I Session-இன் படிகள்

ஜெபம் & உள்ளப் பகிர்வு	கடந்த வாரம் யாரிடம் கேட்டீர்கள்? அவர்கள் என்ன சொன்னார்கள்? ஓரிருவர் பகிரட்டும்.
Icebreaker	கீழே உள்ள Icebreaker.
Teaching: வரம், விருப்பம், திறன்	பெசலெயேல் (யாத் 31:1–5); மூன்றும் சந்திக்கும் இடம் (பக். 26).
Personal Work	திறன் பட்டியல் (பக். 25), முதல் ஐந்து திறன்கள் & சந்திக்கும் இடம் (பக். 26).
Group Sharing	Reflect & Discuss (பக். 24).
நிறைவு ஜெபம்	திறன்களை தேவனுக்கு அர்ப்பணிக்கும் ஜெபம்.

II Icebreaker

Icebreaker

இருவர் இருவராக: மற்றவர் நன்றாகச் செய்வதாக நீங்கள் கவனித்த ஒரு திறனைச் சொல்லுங்கள். பிறகு மாற்றிச் சொல்லுங்கள்.

- குழு பெரியதாக இருந்தால், அருகில் அமர்ந்திருப்பவரோடு மட்டும்.
- இணைப்பு: நம் திறன்களை நம்மைவிட மற்றவர்கள் முதலில் காண்கிறார்கள்.

III தேவையானவை

- [ ] மூன்று வட்ட வரைபடம் வரைந்த பெரிய தாள்
- [ ] மார்க்கர்கள்
- [ ] Workbook
- [ ] வேதாகமம்

Teaching & Discussion

I Teaching — முக்கியக் கருத்துகள்

1. **பாத்திரம் எதால் செய்யப்பட்டது?** எவர்சில்வர், பித்தளை, மண் — ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பயன் (பக். 25).

2. **பெசலெயேல்.** தேவன் அவனைத் தம்முடைய ஆவியினால் நிரப்பி, கைத்திறனைக் கொடுத்தார் (யாத் 31:1–5). திறனும் ஆவியானவரின் கிரியையும் சேர்ந்தே செயல்படுகின்றன.

3. **"நன்றாக" + "விரும்பி".** இரண்டும் சேர வேண்டும். செய்யமுடியும், ஆனால் சோர்வடையச் செய்யும் வேலை அழைப்பு அல்ல.

4. **எந்தத் திறனும் சிறியதல்ல.** சமையல், தையல், கணக்கு, வாகனம் ஓட்டுதல் — எல்லாம் தேவனுடைய பணிக்குப் பயன்படும்.

5. **மூன்றும் சந்திக்கும் இடம்.** வரம் (என்ன) + விருப்பம் (யாருக்காக) + திறன் (எப்படி). அங்கே சோர்வு குறையும், பலன் கூடும் (பக். 26).

II Discussion — Workbook கேள்விகள்

1. **சமையல், தையல், கணக்கு — இவை எப்படி ஊழியமாக முடியும்? ஒரு உதாரணம் சொல்லுங்கள்.**
   → உதாரணம்: சமையல் → நோயாளி குடும்பங்களுக்கு உணவு; கணக்கு → சபைப் பொருளாளர்; வாகனம் → முதியோரை ஆராதனைக்கு அழைத்து வருதல்.

2. **செய்யமுடிந்தும் உங்களைச் சோர்வடையச் செய்யும் வேலை எது?**
   → "முடியும்" என்பது "அழைப்பு" அல்ல. சோர்வும் ஒரு அடையாளம்.

3. **மற்றவர்கள் உங்களிடம் அடிக்கடி உதவி கேட்கும் ஒரு காரியம் எது?**
   → மற்றவர்கள் நம்மில் காண்பது பெரும்பாலும் உண்மையான திறன்.

> **கவனிக்க:** திறன்களை வரங்களோடு குழப்ப வேண்டாம்: திறன்கள் முதல் பிறப்பில், வரங்கள் மறுபிறப்பில் (பக்கம் 8).

அடுத்த Session-க்கு முன்

- [ ] முதல் ஐந்து திறன்கள் அட்டவணையை முடியுங்கள் (பக்கம் 26)
- [ ] உங்கள் திறனைப் பயன்படுத்தக்கூடிய ஒரு ஊழியத் தலைவரிடம் பேசுங்கள்

நிறைவு ஜெபம்

> ஆண்டவரே, என் கைகளும் என் திறன்களும் உம்முடையவை. பெசலெயேலைப் போல உமது ஆவியினால் என்னை நிரப்பி, உமது பணிக்குப் பயன்படுத்தும். ஆமென்.

SESSION 4

Workbook பக்கங்கள் 27–28

P — ஆளுமை

இந்த Session-இன் நோக்கம்

தேவன் என்னை வடிவமைத்த விதத்தை நன்றியோடு ஏற்று, எனக்கு ஏற்ற ஊழியச் சூழலைக் கண்டறிதல்.

I Session-இன் படிகள்

ஜெபம் & திறன் பகிர்வு	“மூன்றும் சந்திக்கும் இடம்” (பக். 26) — ஓரிருவர் பகிரட்டும்.
Icebreaker: மனித அளவுகோல்	கீழே உள்ள Icebreaker.
Teaching: சரி / தவறு இல்லை	பாத்திரத்தின் வடிவம்; சரி / தவறு இல்லை (சங் 139:14).
Personal Work	ஆளுமை அளவுகோல்கள் (பக். 28).
Group Sharing	Reflect & Discuss (பக். 27). எதிர் ஆளுமை உள்ளவர்களை ஜோடியாக்கிப் பேசச் செய்யலாம்.
நிறைவு ஜெபம்	ஒருவரின் வேறுபாடுகளுக்காக மற்றவர் நன்றி சொல்லும் ஜெபம்.

II Icebreaker

Icebreaker

மனித அளவுகோல்: அறையின் ஒரு பக்கம் “வெளிப்படையானவர்”, மறுபக்கம் “அமைதியானவர்”. ஒவ்வொருவரும் தங்கள் இடத்தில் நில்லுங்கள். பிறகு “துணிச்சல் / பாதுகாப்பு”, “குழு / தனியாக” என்று மாற்றுங்கள்.

- தரையில் ஒரு கயிறு அல்லது Tape வைத்து, இரு முனைகளிலும் பெயர் அட்டைகள் வையுங்கள்.
- ஒவ்வொரு அளவுகோலுக்குப் பின்பும் கேளுங்கள்: “இரண்டு முனையிலும் உள்ளவர்கள் சபைக்குத் தேவையா?”

III தேவையானவை

- [ ] கயிறு அல்லது Tape
- [ ] இரு முனை அட்டைகள்
- [ ] Workbook
- [ ] வேதாகமம்

Teaching & Discussion

I Teaching — முக்கியக் கருத்துகள்

1. **பாத்திரத்தின் வடிவம்.** அகலமானதோ குறுகியதோ, மூடியுடனோ திறந்ததோ — ஒவ்வொன்றும் தன் வேலைக்கே பொருந்தும் (பக். 28).

2. **சரி / தவறு இல்லை.** ஆளுமை என்பது குணம் (Character) அல்ல. அன்பு, பொறுமை எல்லோருக்கும் தேவை; ஆனால் ஆளுமை வேறுபாடுகள் தேவனுடைய வடிவமைப்பு (சங் 139:14).

3. **வரத்தை வெளிப்படுத்தும் விதம்.** ஒரே போதிக்கும் வரம் — வெளிப்படையானவர் மேடையில், அமைதியானவர் சிறு குழுவில். ஆளுமை வரத்தின் "பாணியை" தீர்மானிக்கிறது.

4. **இது MBTI அல்ல.** இந்த எட்டு அளவுகோல்கள் எரிக் ரீஸின் S.H.A.P.E. நூலிலிருந்து. இவை ஒரு "Type" கொடுப்பதில்லை; எந்தச் சூழலில் சிறப்பாகப் பரிமாறுகிறோம் என்பதைக் காட்டுகின்றன.

5. **ஒருவரையொருவர் நிறைவு செய்கிறோம்.** எந்த அவயவமும் மற்றொன்றை "வேண்டாம்" என்று சொல்ல முடியாது (1 கொரி 12:21).

II Discussion — Workbook கேள்விகள்

1. **உங்கள் ஆளுமைக்குப் பொருந்தாத ஊழியத்தில் இருந்தபோது எப்படி உணர்ந்தீர்கள்?**
   → சோர்வு தோல்வியின் அடையாளம் அல்ல; பொருத்தமின்மையின் அடையாளம்.

2. **உங்களுக்கு நேர் எதிரான ஆளுமை உள்ளவரோடு சேர்ந்து ஊழியம் செய்வது ஏன் நல்லது?**
   → Icebreaker-இல் கண்ட வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி, ஒவ்வொன்றும் சபைக்கு எப்படித் தேவை என்று கேளுங்கள்.

3. **எந்தச் சூழலில் நீங்கள் சோர்வின்றி அதிகம் பலன் தருகிறீர்கள்?**
   → பக். 28-இல் குறித்த "எனக்கு ஏற்ற சூழலோடு" இணைக்கவும்.

> **கவனிக்க:** ஆளுமையை வைத்து யாரையும் முத்திரை குத்த வேண்டாம்; இது ஒரு கண்ணாடி, கூண்டு அல்ல.

அடுத்த Session-க்கு முன்

- [ ] உங்களை நன்கு அறிந்த ஒருவரிடம் அளவுகோலைக் காட்டி, அவர் உங்களை எங்கே வைப்பார் என்று கேளுங்கள்
- [ ] "என் ஆளுமை ஒரு வாக்கியத்தில்" பெட்டியை முடியுங்கள்

நிறைவு ஜெபம்

> ஆண்டவரே, நீர் என்னை உருவாக்கிய விதத்திற்காக நன்றி. என்னைப் போல் இல்லாதவர்களையும் மதித்து, அவர்களோடு சேர்ந்து உமக்குப் பரிமாற எனக்குக் கற்றுத்தாரும். ஆமென்.

SESSION 5

Workbook பக்கங்கள் 29–35

E — அனுபவங்கள் + என் S.H.A.P.E.

இந்த Session-இன் நோக்கம்

தேவன் எதையும் வீணாக்குவதில்லை என்று உணர்ந்து, என் அனுபவங்களை ஊழியமாக மாற்றி, என் S.H.A.P.E. சுருக்கத்தையும் 90 நாள் திட்டத்தையும் எழுதுதல்.

I Session-இன் படிகள்

ஜெபம்	சுருக்கமான ஜெபம்; இன்று கடைசி Session என்று நினைவூட்டுதல்.
Icebreaker	கீழே உள்ள Icebreaker.
Teaching: தோசைக்கல் பாடம்	தோசைக்கல் பாடம் (பக். 30); ரோமர் 8:28; 2 கொரி 1:4.
Personal Work	அனுபவங்கள் (பக். 30, 32), சுருக்கம் (பக். 33), 90 நாள் திட்டம் (பக். 34). வேதனையான அனுபவங்கள் (பக். 31) வீட்டில் தனியாக.
Group Sharing	Reflect & Discuss (பக். 29); ராஜ்ய நோக்க வாக்கியங்களை வாசித்தல்.
நிறைவு: "இதற்கே!" & ஜெபம்	அர்ப்பணிப்பு ஆராதனை (இந்த வழிகாட்டி, பக். 19).

II Icebreaker

Icebreaker

உங்கள் வாழ்க்கையின் ஒரு "தோசைக்கல்" தருணம் — வெப்பம் உங்களைப் பக்குவப்படுத்திய ஒரு நேரத்தை ஒரு வாக்கியத்தில் பகிருங்கள் (விரும்பினால் மட்டும்).

- "விரும்பினால் மட்டும்" என்பதை உறுதியாகச் சொல்லுங்கள். Facilitator ஒரு சிறிய, பாதுகாப்பான உதாரணத்தோடு தொடங்கட்டும்.
- இணைப்பு: வெப்பம் அழிப்பதற்கல்ல, பக்குவப்படுத்துவதற்கே.

III தேவையானவை

- [ ] Tissue paper
- [ ] தோசைக்கல் (காட்சிக்கு)
- [ ] சான்றிதழ்கள் (விருப்பம்)
- [ ] Workbook
- [ ] வேதாகமம்

Teaching & Discussion

I Teaching — முக்கியக் கருத்துகள்

1. **தோசைக்கல் பாடம்.** புதிய இரும்புத் தோசைக்கல்லில் நல்ல தோசை வராது; வெப்பமும் பயன்பாடுமே அதைப் பக்குவப்படுத்துகின்றன (பக். 30).

2. **தேவன் எதையும் வீணாக்குவதில்லை.** இனிமையானதும் வேதனையானதும் மற்றவர்களுக்கு உதவும் கருவிகளாக மாறலாம் (ரோமர் 8:28; 2 கொரி 1:4).

3. **என் S.H.A.P.E. சுருக்கம்.** ஐந்து பகுதிகளும் ஒரே பக்கத்தில் (பக். 33). கீழே உள்ள உதாரண வாக்கியத்தை வாசித்துக் காட்டுங்கள்.

4. **அடுத்த 90 நாட்கள்.** சிறிய, உறுதியான அடிகள்; இருவரின் உறுதிப்படுத்தல் (பக். 34).

5. **எல்லாவற்றுக்கும் அல்ல — இதற்கே!** சீகன்பால்கு, அன்னை தெரசா — ஒன்றை மையமாக்கியவர்கள் (பக். 35).

ராஜ்ய நோக்க வாக்கியம் — உதாரணம்: தேவன் எனக்கு போதித்தல், ஊக்கமளித்தல் என்ற வரங்களையும், கதை சொல்லும் திறனையும் கொடுத்திருக்கிறார். இவற்றைக் கொண்டு நான் வளரிளம் பருவத்தினருக்கு வேதத்தை எளிமையாகப் புரியவைக்கும் தேவையைச் சந்திக்கும்போது, தேவனுடைய மகிமைக்காகவே நான் வாழ்கிறேன் என்ற நிறைவை உணருகிறேன்.

II Discussion — Workbook கேள்விகள்

1. **உங்கள் வேதனையான அனுபவம் யாருக்கு ஆறுதலாக இருக்க முடியும்?**
   → இருவர் இருவராகப் பகிர்வது பாதுகாப்பானது. யாரையும் கட்டாயப்படுத்த வேண்டாம்.

2. **தேவன் ஒரு கடினமான அனுபவத்தை நன்மையாக மாற்றிய ஒரு சந்தர்ப்பத்தைச் சொல்லுங்கள் (விரும்பினால் மட்டும்).**
   → Facilitator ஒரு சிறிய உதாரணத்தோடு தொடங்கலாம்.

3. **இதுவரை செய்த ஊழியங்களில் எதில் அதிக நிறைவை உணர்ந்தீர்கள்? ஏன்?**
   → 90 நாள் திட்டத்தின் முதல் அடியோடு இணைக்கவும் (பக். 34).

கவனிக்க: வேதனையான அனுபவங்களைக் குழுவில் பகிரக் கட்டாயப்படுத்த வேண்டாம். ஆறாத காயங்களுக்குத் தனியாகப் பேச நேரம் கொடுங்கள்.

அடுத்த Session-க்கு முன்

- [ ] இருவரிடம் உறுதிப்படுத்தல் பெறுங்கள் (பக்கம் 34)
- [ ] உங்கள் S.H.A.P.E. சுருக்கத்தைப் போதகரிடம் காட்டுங்கள்
- [ ] 90 நாள் திட்டத்தின் முதல் அடியை இந்த வாரமே எடுங்கள்

நிறைவு ஜெபம்

> ஆண்டவரே, என் இனிய நாட்களையும் வேதனையான நாட்களையும் உமது கைகளில் கொடுக்கிறேன். எதையும் வீணாக்காத தேவனே, அவற்றை மற்றவர்களுக்கு ஆறுதலாக மாற்றும். ஆமென்.

அர்ப்பணிப்பு ஆராதனை

எல்லாவற்றுக்கும் அல்ல — இதற்கே!

Session 5-இன் நிறைவில் — அல்லது ஒரு ஞாயிறு ஆராதனையின் பகுதியாக. அமைதியாக, அவசரமின்றி நடத்துங்கள்.

1. **"இதற்கே!"** ஒவ்வொருவரும் Workbook பக். 35-இல் எழுதிய "இந்த ஒன்றை" ஒரு வாக்கியத்தில் சொல்லி, "இதற்கே!" என்று முடிக்கட்டும். குழு "ஆமென்" என்று பதில் சொல்லட்டும்.

2. **பாத்திரங்கள் முன்.** மேஜையில் வைக்கப்பட்ட சமையலறைப் பாத்திரங்களில், தன்னைக் குறிக்கும் ஒன்றின் அருகே நிற்கலாம்; அல்லது பக். 35-இல் வரைந்த பாத்திரத்தை உயர்த்திக் காட்டலாம்.

3. **வேத வாசிப்பு.** 2 தீமோத்தேயு 2:21-ஐ எல்லோரும் சேர்ந்து வாசியுங்கள் (கீழே).

4. **அர்ப்பணிப்பு ஜெபம்.** போதகர் அல்லது Facilitator, சபையின் வழக்கப்படி, குழுவுக்காக ஜெபிக்கட்டும் (கீழே உள்ள ஜெபத்தைப் பயன்படுத்தலாம்).

5. **அனுப்புதல்.** விரும்பினால் சான்றிதழ் வழங்கலாம்; அடுத்த ஞாயிறு ஆராதனையில் சபைக்கு அறிமுகப்படுத்தலாம்.

> ஆகையால் ஒருவன் இவைகளைவிட்டுத் தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்.
>
> **— 2 தீமோத்தேயு 2:21**

அர்ப்பணிப்பு ஜெபம்

எஜமானே, இந்தப் பாத்திரங்கள் உம்முடையவை. நீர் இவர்களை வடிவமைத்த விதத்திற்காக நன்றி. இவர்களைச் சுத்திகரித்து, உமக்கு உபயோகமானவர்களாகவும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமானவர்களாகவும் மாற்றும். இவர்கள் கண்டறிந்த வரங்களை உமது சபையிலும் சமூகத்திலும் உண்மையாய்ப் பரிமாற உதவிசெய்யும். இயேசுவின் நாமத்தில், ஆமென்.

அடிக்கடி வரும் கேள்விகள்

பங்கேற்பாளர்கள் கேட்பவை — சுருக்கமான பதில்கள்

I **“எனக்கு எந்த வரமும் இல்லை போலிருக்கிறது.”**
ஒவ்வொரு விசுவாசிக்கும் குறைந்தது ஒரு வரமாவது உண்டு (1 கொரி 12:7). Score குறைவு என்றால் அனுபவம் குறைவு; சேவை செய்யத் தொடங்கும்போது தெளிவாகும்.

II **“என் வரம் சிறியது போலத் தோன்றுகிறது.”**
கரண்டியும் பெரிய பாத்திரமும் — இரண்டும் பரிமாறுகின்றன. பலவீனமாய்க் காணப்படும் அவயவங்களே மிகவும் அவசியம் (1 கொரி 12:22).

III **“திறனும் வரமும் ஒன்றா?”**
இல்லை. திறன் முதல் பிறப்பில், வரம் மறுபிறப்பில். இரண்டும் தேவனுடையவை; சந்திக்கும் இடத்தில் சிறந்த பலன் (Workbook பக். 26).

IV **“இது MBTI Test-ஆ?”**
இல்லை. இவை எரிக் ரீஸின் எட்டு அளவுகோல்கள்; ஊழியச் சூழலைக் கண்டறிய உதவுகின்றன. MBTI செய்தவர்கள் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

V **“அந்நிய பாஷை வரம் ஏன் தேர்வில் இல்லை?”**
அந்நிய பாஷை, வியாக்கியானம், குணமாக்குதல், அற்புதங்கள் — இவை ஜெபத்தாலும் சபையின் உறுதிப்படுத்தலாலும் பகுத்தறியப்படுகின்றன (பக். 20).

VI **“என் Score மாறுமா?”**
மாறலாம். ஆவிக்குரிய வளர்ச்சியும் புதிய ஊழிய அனுபவமும் வரங்களை வெளிப்படுத்தும். ஒரு வருடம் கழித்து மீண்டும் செய்து பார்க்கலாம்.

VII **“என் வரத்துக்கு ஏற்ற ஊழியம் சபையில் இல்லை.”**
போதகரிடம் பேசுங்கள். ஒரு புதிய ஊழியம் தொடங்குவதே தேவன் உங்களுக்கு வைத்த வழியாக இருக்கலாம்.

VIII **ஒருவர் வேதனையான அனுபவத்தைப் பகிர்ந்து உடைந்துவிட்டால்?**
நிறுத்துங்கள்; அமைதியாக அவருக்காக ஜெபியுங்கள். பின்பு தனியாகத் தொடர்புகொள்ளுங்கள்; தேவைப்பட்டால் போதகரிடமோ ஆலோசகரிடமோ இணையுங்கள்.

Workshop-க்குப் பின்

Follow-up

கண்டறிதல் தொடக்கம்; பரிமாறுதலே நோக்கம்

I 90 நாள் பயணம்

வாரம் 1–2
தனிப்பட்ட உரையாடல்
கீழே உள்ள கேள்விகளோடு.

நாள் 30
முதல் Check-in
சோதனை ஊழியம் எப்படிப் போகிறது?

நாள் 60
இரண்டாம் Check-in
என்ன மகிழ்ச்சி? என்ன சோர்வு?

நாள் 90
மதிப்பாய்வு
தொடரலாமா, மாற்றலாமா? அடுத்த அடி என்ன?

II தனிப்பட்ட உரையாடல் — ஐந்து கேள்விகள்

1. உங்கள் S.H.A.P.E. சுருக்கத்தில் உங்களை அதிகம் ஆச்சரியப்படுத்தியது எது?
2. உங்கள் முதல் மூன்று வரங்களைப் பயன்படுத்தக்கூடிய ஒரு ஊழியத்தைச் சொல்லுங்கள்.
3. உங்கள் உள்ளம் யாருக்காக, எதற்காகத் துடிக்கிறது?
4. 90 நாள் திட்டத்தின் முதல் அடி என்ன? அதற்கு என்ன உதவி தேவை?
5. உங்களுக்காக நான் எப்படி ஜெபிக்கலாம்?

III சோதனை ஊழியம் (Trial Serving)

நான்கு வாரங்கள்
ஒரு ஊழியத்தில் நான்கு வாரங்கள் சோதனையாகச் சேவை செய்தல்.

ஒரு துணை
அந்த ஊழியத்தின் தலைவர் ஒருவர் உடனிருந்து வழிகாட்டுதல்.

மாற்றலாம்
பொருந்தவில்லையென்றால் மாற்றுவது தோல்வி அல்ல; கண்டறிதலின் பகுதி.

Workbook பக். 34: பங்கேற்பாளரின் “போதகரின் குறிப்பு / பரிந்துரைக்கப்பட்ட ஊழியம்” பெட்டியை இந்த உரையாடலில் நிரப்பலாம்.

Workshop-க்குப் பின்

சபை ஊழியங்களும் வரங்களும்

பங்கேற்பாளர்களைப் பொருத்தமான இடத்தோடு இணைக்க



கீழே உள்ளவை உதாரணங்கள் மட்டுமே. உங்கள் சபையின் ஊழியங்களுக்கு ஏற்ப மாற்றி, ஒவ்வொரு ஊழியத்துக்கும் தொடர்புகொள்ள வேண்டியவரின் பெயரை எழுதுங்கள்.

ஊழியம்	பொருந்தும் வரங்கள்	தொடர்புக்கு
ஞாயிறு பள்ளி / சிறுவர் ஊழியம்	போதித்தல், மேய்ப்பர், கலைவழித் தொடர்பு	
வாலிபர் ஊழியம்	தலைமைத்துவம், ஊக்கமளித்தல், மேய்ப்பர்	
வரவேற்பு / புதியவர்கள்	விருந்தோம்பல், ஊக்கமளித்தல், உதவிசெய்தல்	
ஜெபக் குழு	பரிந்து பேசுதல், விசுவாசம், பகுத்தறிவு	
சுவிசேஷம் / புதிய இடங்கள்	நற்செய்தி அறிவித்தல், அப்போஸ்தலர், விசுவாசம்	
ஆராதனை, இசை, ஊடகம்	கலைவழித் தொடர்பு, கைத்திறனோடு செயல்படுதல்	
கட்டடம், பராமரிப்பு, அலங்காரம்	கைத்திறனோடு செயல்படுதல், உதவிசெய்தல்	
நிர்வாகம், கணக்கு, நிகழ்ச்சிகள்	நிர்வாகம், உதவிசெய்தல், கொடுத்தல்	
மருத்துவமனை / இரக்க ஊழியம்	இரக்கம், உதவிசெய்தல், பரிந்து பேசுதல்	
சிறு குழுக்கள் / வீட்டுக் கூட்டங்கள்	மேய்ப்பர், போதித்தல், ஞானம், அறிவாற்றல்	
ஆலோசனை / சீஷத்துவம்	ஞானம், ஊக்கமளித்தல், பகுத்தறிவு, தீர்க்கதரிசனம்	

வரம் மட்டும் போதாது. ஒரே வரம் உள்ள இருவர் வேறு வேறு ஊழியங்களுக்குப் பொருந்தலாம். விருப்பம் (யாருக்காக), ஆளுமை (எந்தச் சூழல்), அனுபவம் — எல்லாவற்றையும் சேர்த்துப் பாருங்கள்.

குணமே அடித்தளம். வரங்கள் ஊழியத்தைத் தீர்மானிக்கின்றன; ஆனால் பொறுப்பு கொடுக்கும் முன் குணத்தையும் உண்மைத்துவத்தையும் கவனியுங்கள் (1 தீமோ 3:10).

Participant Tracker

ஒவ்வொரு பங்கேற்பாளரையும் 90 நாட்கள் பின்தொடர. Check-in முடிந்ததும் கட்டத்தைக் குறியுங்கள். இந்தப் பக்கத்தை நகலெடுத்துப் பயன்படுத்தலாம்.

#	பெயர்	முதல் 3 வரங்கள்	யாருக்காக (விருப்பம்)	பரிந்துரைக்கப்பட்ட ஊழியம்	30	60	90
1					☐	☐	☐
2					☐	☐	☐
3					☐	☐	☐
4					☐	☐	☐
5					☐	☐	☐
6					☐	☐	☐
7					☐	☐	☐
8					☐	☐	☐
9					☐	☐	☐
10					☐	☐	☐
11					☐	☐	☐
12					☐	☐	☐
13					☐	☐	☐
14					☐	☐	☐



ஒவ்வொரு பாத்திரமும்
தன் இடத்தைக் கண்டடைய.

இந்த வழிகாட்டி, “எஜமானுக்கு உபயோகமான பாத்திரம்” பயிற்சி நூலை ஐந்து Sessions-ஆக நடத்தும் தலைவர்களுக்காக. Session திட்டங்கள், Icebreaker-கள், Teaching குறிப்புகள், Discussion வழிகாட்டுதல், அர்ப்பணிப்பு ஆராதனை, Workshop-க்குப் பிந்தைய Follow-up — எல்லாம் ஒரே இடத்தில்.

Translated & adapted by Praison Timothy

Workshop-க்கு: +91 95003 92919 · stanley.praison@gmail.com

“இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்” (மத்தேயு 10:8). இது தேவனுடைய ராஜ்யத்திற்காக மட்டுமே; இலாப நோக்கமற்றது. பயன்படுத்தவும், அச்சிடவும், பகிரவும் தாராளமாய் உரிமை உண்டு; ஆனால் இலவசமாக மட்டுமே. எந்த வடிவிலும் விற்கவோ, பணம் சம்பாதிக்கப் பயன்படுத்தவோ கூடாது.

S.H.A.P.E. என்ற கருத்தை முதலில் ரிக் வாரன் அவர்கள் *The Purpose Driven Life* (Zondervan) நூலில் அறிமுகப்படுத்தினார்; எரிக் ரீஸ் அவர்கள் *S.H.A.P.E.: Finding and Fulfilling Your Unique Purpose for Life* (Zondervan) நூலில் அதை விரிவாக்கினார். இந்த வழிகாட்டி அந்தக் கட்டமைப்பைத் தழுவி தயாரிக்கப்பட்டது. வேத வசனங்கள்: TAOVBSI.

2 தீமோத்தேயு 2:21